# குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கும் நிலையை முடிவுக்கு கொண்டுவந்து, பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைப்பதை உறுதிசெய்யுங்கள்

**AMNESTY**
**INTERNATIONAL**



# குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கும் நிலையை முடிவுக்கு கொண்டுவந்து, பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைப்பதை உறுதிசெய்யுங்கள்

**AMNESTY**
**INTERNATIONAL**



# இலங்கையில் சட்டத்துக்கு பதில் சொல்ல வேண்டிய நிலை வரவேண்டும்

2006 ஜனவரியில் இலங்கையின் பாதுகாப்புப் படையினரால் தமிழ் மாணவர்கள் ஐந்து பேர் கொல்லப்பட்டும், இரண்டு பேர் கடுமையான காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டும் இருந்தனர். அந்த மனித உரிமை மீறல் தொடர்பாக இதுநாள்வரை எவருமே சட்டத்துக்கு பதில் சொல்லியிருக்கவில்லை. குற்றச்செயல்களுக்கு பொறுப்பானவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துவருவது என்பது இலங்கையில் பெருநோயாய்ப் பரவியுள்ளது. அதன் ஒற்றை உதாரணம்தான் இந்த சம்பவம்.

2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் தேதி, திருகோணமலையில் ஒரு முச்சக்கர வண்டியிலிருந்து சில மாணவர்கள் மீது எறிகுண்டு ஒன்று வீசப்பட்டிருந்தது. அந்த மாணவர்களில் குறைந்தது மூன்று பேர் குண்டுவீச்சிலே காயமடைந்திருந்தனர். விசேட அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள் என்று நம்பப்படும் சீருடை அணிந்த அதிகாரிகள் 10 முதல் 15 பேர் வரையிலானவர்கள் அவ்விடத்துக்கு வந்து, மாணவர்களை தங்களது ஜீப் வண்டியில் தூக்கிப்போட்டுக் கொண்டுபோய் துப்பாக்கியின் பின்னங்கட்டையால் தாக்கியிருக்கவும், அவர்களை வீதியிலே தள்ளிவிட்டிருக்கவும் செய்தனர். அதன் பின்னர் அந்த இளைஞர்களில் ஐந்து பேரை பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் சுட்டுக்கொன்றதாக சாட்சி ஒருவரின் வாக்குமூலம் சொல்கிறது. சண்முகராஜா கஜேந்திரன், லோஹிதராஜா ரோஹன், தங்கதுரை சிவானந்தா, யோகராஜா ஹேமச்சந்திரன் மற்றும் மனோகரன் ரஜீஹர் ஆகியோர் கொல்லப்பட்டவர்கள் ஆவர். வேறு இரண்டு இளைஞர்கள் காயங்களுடன் உயிர்ப் பிழைத்திருந்தனர்.

ஐந்து பேருமே எறிகுண்டு வெடித்ததிலேதான் கொல்லப்பட்டார்கள் என்று பாதுகாப்புப் படையினர் ஆரம்பத்தில் கூறியிருந்தனர். அந்த எறிகுண்டை அந்த மாணவர்களேதான் வைத்திருந்தனர் என்றும் படையினர் குற்றம்சாட்டியிருந்தனர். ஆனால் பின்னர் நடந்த பிரேதப் பரிசோதனைகளில், அவர்கள் ஐந்து பேருமே துப்பாக்கி குண்டு பாய்ந்ததில் கொல்லப்பட்டனர் என்ற தகவல் வெளியானது. அவர்களில் மூன்று பேர் தலையில் சுடப்பட்டிருந்தனர்.

## இப்போதே காரியத்தில் இறங்குங்கள்!

தயவுசெய்து இந்த தபால் அட்டையில் கையெழுத்திட்டு இலங்கையின் ஜனாதிபதிக்கு அனுப்பிவையுங்கள்.

AMNESTY INTERNATIONAL

Index: ASA 37/007/2009

அன்புக்குரிய ஜனாதிபதி அவர்களே,

மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் கொண்டுவரப்படும் நோக்கில், இலங்கை அரசு பின்வரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்:

■ மனித உரிமை மீறல்களைச் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட தேசிய செயற்திட்டம் ஒன்றை உருவாக்கவும், நடைமுறைப்படுத்தவும், அதற்கு ஆதரவு வழங்கவும் வேண்டும்.

■ போதுமான நிதி மற்றும் ஆதாரங்களுடனும், கவனமான திட்டமிடலுடனும், தொழில்நுட்ப உதவிகளுடனும் கூடிய சாட்சிகள் பராமரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வரவேண்டும்.

■ கள நிலைமையை அவதானிக்கும் சுயாதீன அமைப்பொன்றை அழைத்துவந்து, அதற்கு ஆதரவு வழங்க வேண்டும். எந்தத் தரப்பு துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டாலும் அதைக் கண்காணிக்கவும், விசாரிக்கவும், மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக நீதி கிடைக்கச் செய்வதில் தேசிய நிறுவனங்களுக்கு உதவவும் இவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

பெயர்: ______________________

நாடு: ______________________

Index: ASA 37/007/2009

தபால் வில்லை ஒட்டவும்

His Excellency
President Mahinda Rajapaksa
Presidential Secretariat
Colombo 1
Sri Lanka

படம்: ஐந்து மாணவர்களின் இறுதி ஊர்வலம், ஜனவரி 2006. © தனியார்

Amnesty International, International Secretariat, Peter Benenson House, 1 Easton Street, London WC1X 0DW, United Kingdom. www.amnesty.org